**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE SESSIONS JUDGE,**
**MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | - **S.C No.358/2016** |
| Deposition of witness for | - P.W. 11 |
| Name | - Thiru. Shanmugam |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **01.09.2023**

**எதிரிகள் ஆஜர்:**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை மாநகர் சிறப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.11.2015ம் தேதி மதுரை மாவட்டம் பேரையூர் வட்ட காவலராக பணியில் இருந்தபோது பேரையூர் காவல் நிலைய குற்ற எண்.170-2015 பிரிவு 365, 394 IPC வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அதசாஆ.1 மற்றும் அதசாஆ.12 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 11.11.2015ம் தேதி 14.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பாலசுப்பிரமணியன், கோவிந்தன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே ஏற்கனவே அதசாஆ.6 மற்றும் அதசாஆ.7 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் 16.00 மணிக்கு சேடப்பட்டி ஊருக்கு வடக்கே இபி ஆபிஸ் அருகே வைத்து வழக்கின் பாதிக்கப்பட்ட பெண்ணான சின்னத்தாய் என்பவரை மீட்டு அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த இடத்தில் சாட்சிகள் அறிவழகன், கிராமநிர்வாக அலுவலர் பெரியகட்டளை பொறுப்பு சின்னகட்டளை, முருகேசன் கிராம உதவியாளர் சின்ன கட்டளை ஆகியோர் முன்னிலையில் எதிரிகள் கடத்திவந்த மகேந்திராலோகன் சிவப்பு நிற கார் எண். KL33 A2430, Engine No.DO33134, Chasis No. MAILSRFJH8ZH 25995 என்ற வாகனத்தை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதனை நிலையம் கொண்டுவந்து படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அந்த படிவம் 95 அதசாஆ.13 ஆகும்.** அந்த வாகனம் ஏற்கனவே அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் சாட்சிகள் ஸ்டீபன், சுரேஷ், அழகுசுந்தரம், மீனா, சித்ராதேவி, பாலசுப்பிரமணியன், கோவிந்தன், அறிவழகன் கிராம நிர்வாக அலுவலர், முருகேசன் கிராம உதவியாளர், சிறப்பு சார்பு ஆய்வாளர் வீரபுத்திரன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.11.2015ம் தேதி 16.30 மணிக்கு உசிலம்பட்டி ரோட்டில் சின்னகட்டளை பஸ் ஸ்டாப்பில் வைத்து வழக்கின் எதிரியான கண்ணன் என்பவரை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் அறிவழகன் கிராம் நிர்வாக அலுவலர், முருகேசன் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் தானும் தனது கூட்டாளி பாக்கியராஜ் என்பவரும் காருடன் பெண்ணை கடத்தியது பற்றியும்அவரிடமிருந்து பணம் ரூ.2000யை கொள்ளை அடித்தது பற்றியும் கூறினார். பின்னர் தன்னை கூட்டிச்சென்றார். சம்பவத்திற்கு

பயன்படுத்திய தனது இருசக்கர வாகனத்தையும் பணத்தையும் ஆஜர் செய்வதாக சொன்னார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.14 ஆகும்.** அன்றைய தினமே 18.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து எதிரி கண்ணன் என்பவர் அவரது சட்டைப்பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.500 நோட்டுகள் -2 அதன் வரிசை எண். 5SS716993, 6QF326692 என்ற எண் உள்ளதை ஆக மொத்தம் ரூ.1000 அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ரூபாய் ஏற்கனவே அசாபொ.2 வரிசை ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் 19.15 மணிக்கு பேரையூர் நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் முன்பு வைத்து எதிரி அடையாளம் காட்டிய TN 67 A2728 பதிவு எண் கொண்ட Suzuki Motor Cycle -1 Engine No.1806M103336, Chasis No. 1806F056155 உள்ளதை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்து. அந்த இருசக்கர வாகனம் ஏற்கனவே அசாபொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். **அந்த இருசக்கர வாகனத்திற்கான படிவம் 95 அதசாஆ.15 ஆகும். ரூபாய் நோட்டுகளுக்கான படிவம் 95 அதசாஆ.16 ஆகும்.** 13.11.2015ம் தேதி காலை 06.00 மணிக்கு உசிலம்பட்டி ரோட்டில் சேடபட்டி பஸ்ஸ்டாப்பில ் வைத்து இவ்வழக்கின் எதிரியான பாக்கியராஜ் என்பவரை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் அறிவழகன் கிராம நிர்வாக் அலுவலர், முருகேசன் கிராம உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் எதிரியை விசாரிக்க தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்தார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.17 ஆகும்.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் தன் கூட்டாளி கண்ணன் என்பரும் பெண்ணை காருடன் கடத்தியது குறித்தும் ரூபாய் 2000 யை கொள்ளை அடித்தது குறித்தும் கூறினார். அன்றைய தினம் 07.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி தனது சட்டப்பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த 500ரூபாய் நோட்டு ஒன்றும் 100ரூபாய் நோட்டுகள் 5ம் ஆக ரூ.1000 ஆகும். அதை அத்தாட்சி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின் 08.00 மணிக்கு எதிரி சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்புவித்து கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 95 தயார் செய்தேன். **அந்த ரூபாய் நோட்டுகளுக்கான படிவம் 95 அதசாஆ.18 ஆகும்.** அதன் பின்னர் எதிரிகள் கண்ணன், பாக்கியராஜ் ஆகியோர்களை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் சாட்சிகள் அறிவழகன், கிராம நிர்வாக அலுவலர், முருகேசன் கிராம உதவியாளர் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் ஸ்டீபன், சுரேஷ், சுந்தரம், மீனா ஆகியோர்களை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 20.11.2015ம் தேதி வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் சின்னத்தாய் என்பவர் எதிரிகளை அடையாளம் காட்டவேண்டி திருமங்கலம் மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுததேன். 02.12.2015ம் தேதி மதுரை மத்திய சிறையில் மதுரை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5 அவர்கள் முன்பாக அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்ணை பெண் காவலர் மூலம் அனுப்பிவைத்தேன். அந்த அடையாள அணிவகுப்பு அறிக்கை ஏற்கனவே அதசாஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.12.2015ம் தேதி

திருமதி.சின்னத்தாய் என்பவரை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 16.03.2016ம் தேதி திரு.முருகன் தலைமை எழுத்தர், குற்றவியல் நீதிமன்றம் பேரையூர், சந்திரசேகர் முதல்நிலைக்காவலர் 1931 பேரையூர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 365,394 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அசா.1ன் புகாரை யார் எழுதியது என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் வீரபத்திரன் என்பவர் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளார். அசா.1 புகாரில் உள்ள கையெழுத்து அசா.12 முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்து வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். அசா.2 பேரையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த விபத்து பதிவேடு இந்த வழக்கில் பாதகமாக உள்ளது என்பதால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுச்சென்றதாக மருத்துவமனையில் சொன்னார்கள். மருத்துவ நமுனா மற்றும் ஒபி ரசீது இணைத்து அனுப்பவில்லை என்றால் சரிதான். அசா.3 சாட்சி கையெழுத்து போட்ட உண்மையான புகார் இவ்வழக்கிற்கு பாதகமாக உள்ளதால் அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. கார் பிடிக்கப்பட்ட இடத்தில் கார் எடுத்ததாக சொல்லப்படும் 20நிமிடத்தில் அசா.2 புகார் கொடுத்ததாகவும் அது வழக்கிற்கு பாதகமாக உள்ளதால் அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அசா.2யை விசாரித்து வாக்குமூலம் மட்டும் பதிவு செய்தேன். கார் கடத்தப்பட்டதாக சொல்லப்படும் தகவல் புகார் தாரர் தான் காவல் நிலையத்தில் வந்து தகவல் சொன்னார். காரை சேடப்பட்டி ஊருக்கு வடக்கு இபி ஆபிஸ் அருகில் 16.00 மணிக்கு வைத்து பிடித்தேன். 1, 2

எதிரிகளை அசா.1 மற்றும் 2க்கு காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காண்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அசா.1 வாக்குமூலத்தில் தமிழ் படிக்க, பேச தெரியும் என்று சொல்லியுள்ளார். அசா.1 என் விசாரணையில் பார்த்தால் அடையாளம் தெரிந்த நபர் என்று என்விசாரணையில் சொல்லவில்லை. அசா.1 என் விசாரணையில் 100மீ தள்ளி மற்றொரு நபர் பைக்கை நிறுத்திவிட்டு காரில ஏறி சென்றார் என்று சொல்லவில்லை. அதேபோல் அசா.1 டீக்குடிப்பதற்காக டீக்கடையில் காரை நிப்பாட்டியபோது மதியம் 11.00 மணி என்று என் விசாரணையில் சொல்லவில்லை. அசா.2 எனது விசாரணையில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் வந்து காரை எடுத்து வேகமாக சென்றார், நான் ஏன் எடுக்கிறீர்கள் என்று கேட்டேன் எதிரி காரை மாற்றிப்போடுவதற்காக தான் வந்தேன் என்றும் அசா.2 கண்ணாடியில் பார்த்து கத்தினேன் என்றும் கொஞ்சதூரம் சென்ற பிறகு இன்னொருவர் வந்து காரில் ஏறினார் என்றும் என் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை போகும் வழியில் சுமார் 150 அடி தூரத்தில் வண்டியை நிறுத்தி மற்றும் ஒருவனை ஏற்றி என் அருகே உட்கார்ந்து வந்தான் என்று சொல்லியுள்ளார். அசா.4 என் விசாரணையில் 2015ம் வருடம் காலை 11.00 முதல் 12.00 மணியளவில் டீக்குடித்ததாக சொல்லவில்லை 12.30 மணி என்று சொல்லியுள்ளார். ஸ்டீபன், மற்றும் சின்னத்தாயின் குவிமுச பிரிவு 161/(3) வாக்குமூலங்களில் நீதிமன்றத்தின் சீல் 16.11.2015 என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் நீதித்துறை நடுவர் 13.11.2015ல் பெறப்பட்டதாக சுருக்கொப்பம் இட்டுள்ளார். நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்வில்லை என்றும் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மர்திரி வரைபடம் தயார்செய்யவில்லை என்றும் நான் சொல்வது போல் எதிரிகளை கைது செய்வில்லை என்றும் எதிரிகள் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம்

கொடுக்கவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி அசா.1யிடம் ஆக்டிங் டிரைவராக இருந்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு ஓட்டுனராக இருந்துவந்தார் என்றும் அசா.1 1வது எதிரிக்கு சம்பள பாக்கி நிலுவையில் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 1வது எதிரி அசா.1யிடம் அவருக்கு வரவேண்டிய நியாயமான சம்பள பாக்கியை கேட்டதால் அதை தராமல் அவரது காரை கடத்திச்சென்றதாக பொய்யாக புகார் கொடுத்தார் என்றும் அதை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த குற்ற வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.